ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

. தொகுதி கூ. பிரஜோத்பத்தி௵ பங்குனி௴ பகுதி ௩:
Vol. 9. March & April 1932. **No. 3.**

தத்வ ஜ்ஞானம்.

பிரத்யக்ஷம் அநுமானம் ஆகமம் என்ற மூன்று பிரமாணங்களால் ஆராய்ந்து பார்ப்போமாகில் உலகிற காணப்படுகிற எல்லாப் பிறவிகளிலும் மக்கட்பிறப்பே சிறந்ததென்பது தெளிவாகும். மக்கள் பகுத்தறிவுடையவர்களாய், பசு அசுவம் முதலிய விலங்குகளையும் போகோபகரணமாகக் கொண்டுள்ளவர்களாய், விரும்பிய இன்பத்தை அநுபவிக்கின்றவர்களா யிருக்கின்றனரென்பது யாவரும் கண்கூடாகக் கண்டதொன்றாதலால் காண்டளவையால் இவர்களே சிறந்தவர்களென்பது போதரும். மக்களே சிறந்தவர். விரும்பிய போகங்களை யநுபவிக்கின்றனராதலால். அரசன்போல. என்ற அநுமானத்தாலும் இவர்களே சிறந்தவ ரென்பது தெளிவு. 'இதைச் செய்' 'இதைச் செய்யாதே' என்ற சாஸ்திர விதிவிலக்குகட்கு விஷயம், இறைவன் முற்றறிவினனாதலால் அவனுமாகான். அசேதனம அறிவற்றதாதலால் அதுவுமாகாது. விலங்குகள் பகுத்தறிவற்றனவாதலால் அவையுமாகா. பகுத்தறிவுடைய மக்களேயாவர். இங்ஙனம் மக்களையே லக்ஷ்யமாகக்கொண்டு விதிக்கிற சாஸ்திரத்தின் கருத்தை நோக்கினும் இவர்களே சிறந்தவராவரென்பது புலனாகும.

இவர்கள் தத்வஜ்ஞாநத்தைப் பெற்றால் மாத்திரந்தான் சிறந்த பிறவியெடுத்ததின் பயனைப் பெறுவர். இன்றேல், பயனற்றவர்களாயொழிவர். தத்வஜ்ஞானமாவது—உண்மையறிவாம். இங்கு இறைவனை உள்ளவாறு அறிவதையே தத்வஜ்ஞாநமென்று சொல்லப்பட்டது. மேலும், "தத்வஜ்ஞாநாந்மோக்ஷலாப:" என்றும், "ஜ்ஞாநாந்மோக்ஷ:" என்றும், தத்வஜ்ஞாநத்தை மோக்ஷ ஸாதனமாகச் சொல்லியிருப்பதால் சிறப்புடைய மக்கள் இதனைப் பெற வேண்டியதும் இன்றியமையாததே.

மக்களுள் ஆர்த்தன் அர்த்தார்த்தி ஜிஜ்ஞாஸு ஞானி என்று நானகு வகுப்பினருண்டு. இந்த நால்வருள் ஆர்த்தன் என்பவன் இழந்துபோன ஐச்வர்யத்தைப் பெறவேண்டுமென்று இறைவனை உபாஸித்துப் பெற்று நீங்கிவிடுவான். அர்த்தார்த்தியென்பவன் புதிய பொருளைப் பெறவேண்டும் என்று இறைவனை உபாஸித்துப் பெற்று நீங்கிவிடுவான். ஜிஜ்ஞாஸு என்பவன் ஆத்மாநுபவத்தைப் பெறவேண்டுமென்று உபாஸித்துப் பெற்று நீங்கிவிடுவான்.

* ஞானிமாத்திரம் இறைவனையே அடையவேண்டுமென்று மற்றொன்றிலும் பற்றின்றி அவனிடத்திலே மிக்க பக்தியுடையவனாயிருப்பானாதலால் இவனே சிறந்தவனாவான். இதனால் போந்த கருத்து யாதெனின்:— இறைவனையே அறச்சிறந்தவனாக மதித்து மற்றொன்றிலும் பற்றின்றி அவனையே உபாயோபேயமாக அறிவது தான் தத்வஜ்ஞானமென்பது பெறப்பட்டது. இந்தத் தத்வஜ்ஞானமும் அத்யந்த பரிநிரூபமாகப் பரிணமிக்காதபோது பயனற்றதாயொழியும்.

---

* "தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர் விசிஷ்யதே
ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:"

(இ-ள்.) இவர்களில் ஞானிதான் மிகவுஞ் சிறந்தவன், ஏனெனில்;— அவன் என்னையே யடையவேண்டுமென்று என்னை எப்பொழுதும் நாடினவனாய் மற்றொன்றிலும் பற்றின்றி மிகுதியாக என்னிடத்தில் பக்தியுள்ளவனாயிருக்கிறான். இந்த ஞானிக்கு நான் மிகவும் பிரியன், அவனும் எனக்குப் பிரியன் (எ-று.)

மேலும், இத்தகைய ஞானியை இறைவன் “ஜ்ஞாநீத்வாத்மைவமேம்மதம்” என்று தனக்கு ஆத்மாவாக அருளிச்செய்தான். இந்த விஷயத்தில் ‡ சாஸ்திரத்திற்கும் இறைவன் தனக்கும் அபிப்பிராய பேத முண்டென்பதைக் காட்டுவதற்காகவே ஞானியெனக் குயிரா வான் என்றுமாத்திர முரைத்துவிடாமல், ஞானியே எனக்குயிராவானென்பது என்னுடைய சம்மதமென்றான். இதனால், உலகிற் கெல்லாம் ஒருயிராய் விளங்கும் இறைவனுக்கும் ஞானியுயிராவனென்று ஞானியின் பெருமை சொல்லப்பட்டது.

இறைவன் எல்லோருக்கும் தாரகனாயிருக்கிறானே யன்றி, அவன்றனக்குத் தாரகமாயிருப்பாரில்லை. அங்ஙனமிருக்க, ஞானி அவனுக்குயிராவானென்பது எவ்வாறு பொருந்துமென்று ஆக்ஷேபிக்கக்கூடும். அதற்குச் சமாதானம் வருமாறு காண்க.—

ஞானி உயிராவானென்பதற்குக் கருத்திதுவாம்.—உயிரானது சரீரத்தின் இதத்தை நாடும். ஈசுவரன் எல்லோருக்கும் இதத்தை நாடுகின்றானாதலால் அவன் எல்லோருக்கும் உயிராயினான். அது போல ஞானியானவன் இறைவன்றன் இதத்தை நாடும் இயல்பினனாதலால் இவனை அவனுக்குயிரென்னலாம்.

ஒன்றால் ஒரு குறைவில்லாத இறைவன், குறைவுடைய ஜீவர்கட்கு இதத்தை நாடுவது இயல்பாம். ஜீவனாகிய ஞானி அவனுக் கிதத்தை நாடுவதென்பது எப்படி? அப்படியானால் அவன் குறைவுடையவனாவனன்றோ வென்னின்,—ஞானியானவன் ஈசுவரன்றன் திவ்யாத்மஸ்வரூபத்திற் கண்வைத்து *“வாராஹ்ய ஸக்திர்விவிதைவ ஸ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச” “பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச” என்று அநுஸந்திப்பான். அப்பொழுது இவன் ஸர்வேசுவரனை ரக்ஷகனாகவும், தன்னை அவனால் ரக்ஷிக்கப்படும் பொருளாகவும் கருதுவன்.

---

‡ சாஸ்திரம், “யஸ்யாத்மா சரீரம் யஸ்யப்ருதிவீ சரீரம்” என்று ஆத்மாவையும், ப்ரக்ருதிகாரியமான பஞ்சபூதங்களையும் சரீரமாகச்சொல்லியது.

* இதன் பொருளாவது.—ஜ்ஞான பலக்கிரியைகளையுடைய அநேகவிதமான சக்தி இறைவனுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கிறது; என்பதாம்,

அதன்மேல் திவ்யமங்கள விக்ரஹத்தை அநுபவிக்கத் தொடங்கும் போது, அதனிடத்திலுள்ள ஸௌந்தர்ய முதலிய குணங்கள், முன் பிறந்த அறிவை அத்யந்த ப்ரீதிரூபமாகப் பரிணமிக்கும்படி செய்யும். அதனால் இவன் ஈடுபட்டுத் தன்னை ரக்ஷகனாக மதித்து, 'இவ் வஸ்துவுக்கு ஒரு தீங்கும் வாராதிருக்க வேண்டுமே' என்று பரிவுற்று இத சிந்தை செய்வான். இங்கு இவன் இறைவனை ரக்ஷ்யவஸ்துவாக நினைத்தது பரிவின் காரியமாதலால், இதனை இறைவன் ஓர் குறைவாக நினைத்திரான்.

இது நிற்க, 'அஃதுடைப் பொருளின்கண் அது விசேஷண மாகத் தோன்றுமுணர்வு உண்மையறிவாம்' இங்கு, ஞானியான வன் ரக்ஷகத்வ தர்மமுடைய பரவஸ்துவை ரக்ஷகத்வ விசேஷண முடையதாகவுணராமல், ரக்ஷ்யத்வ விசேஷணமுடைய வஸ்துவாக அறிவானேல் அது பொய்யுணர்வாகுமன்றே யெனின் ;—

திவ்யமங்கள விக்ரஹத்தின் ஸௌந்தர்ய முதலியவை ஈடு படுத்த அதனால் துவக்குண்டு ஈசுவரனை ரக்ஷ்யவஸ்துவாக மாறுடி நினைத்தான். இவ்வாறு நினைத்த அறிவின் ஸ்வரூபம் பொய்மையா யிருந்தாலும் வஸ்து வைலக்ஷண்ய சாமக்கிரியால் பிறந்ததாதலால் ஸிலாகிக்கப்படும்.

மேலும், ஞானியானவன் அறிவின் முதிர்ச்சியால் தன்னை மாறுடி ஈசுவரனை ரக்ஷ்யமாக மதித்துப் பரிவுற்றபரிவானது, ஈசுவர னுடைய முகமலர்ச்சிக்கு ஹேதுவாயிருப்பதால், இது கொண் டாடத்தகும் பெற்றியதே.

இன்னும், ஸர்வேசுவரனுக்குத் திவயாத்ம ஸ்வரூபத்தைப் பற்றிய குணங்களும், திவ்யமங்கள விக்ரஹத்தைப்பற்றிய குணங் களுமுண்டு. இவ்விருவகைக் குணங்களிலும் ஈடுபட்டவர்களே அவன்றன்னை முற்றிலுமுணர்ந்தவராவர். அவர்களுடைய அறி வுக்குத்தான் ப்ருஹத்வமுண்டு. விஷ்ணுசித்தர் பாண்டியனுடைய வித்வத் ஸபையில் பரவஸ்துவினியல்பையறிந்து பரதத்வநிர்ணயஞ் செய்தபின்னர் நகர்வலம் வருகிறபோது ஸர்வேசுவரன் கருட வாகனரூடனாய் ஸேவை சாதிக்கக்கண்டு ஸௌந்தர்யத்தில் ஈடு

பட்டு, 'இவ்வஸ்துவுக்கு என்ன தீங்குவருமோ' என்று பொங்கும் பரிவாலே பல்லாண்டு பாடி பெரியாழ்வார் என்ற பெயரைப் பெற்றனர்.

பொய்யாஸனமிட்ட துரியோதனன் ஸபைக்கெழுந்தருளிய பின்னர், கண்ணபிரான் விதுராழ்வான் திருமாளிகைக்கு எழுந் தருளினன். அப்பொழுது விதுராழ்வான் ஓராசனமிட்டு, அதை நன்றாய்த் தடவிப்பார்த்தார். 'நாமும் பொய்யாஸனமிட்ட துரியோ தனன் சம்பந்தப்பட்டுளோமாதலால் அவன் செய்தபடியே செய்து விட்டோமோ?' என்று தம் விஷயத்தில் சம்சயங்கொண்டார். இவ்விவரத்தை யுரைக்கத்தொடங்கிய ரிஷியானவர் "ஸம்ஸ்ப்ருஶ்ய ஆஸநம் ஶௌரே: விதுரஸ் ஸமஹாமதி:" "ஸம்ஸ்ப்ருசந் ஆஸநம் சௌரே: விதுரஸ் ஸமஹாமதி:" என்றார். இங்கு விதுரர் தம் விஷயத்தில் சமசயங்கொண்டு ஆசனத்தை அமுக்கிப் பார்த்த செயல் மதிகெட்ட செயலன்றென்பார் மஹாமதி: என்றார். இதனால் அறிவின் முதிர்ச்சியால் ஈசுவரவிஷயத்தில் பரிவு எப்பொழு துண்டாகுமோ? அப்பொழுதுதான் அறிவானது பூர்த்தியுறுகிற தென்பது தெளிவாகும்.

ஆகவே ஸர்வேசுவரனை ஸர்வ சக்தியுடையவன் என்றறிதல் தத்வஜ்ஞானத்தின் அங்குராவஸ்தை யென்றும், அவனை ரக்ஷ்ய வஸ்துவாக மதித்துப் பேணத்தொடங்கு முணர்ச்சியானது, தத்வ ஜ்ஞானத்தின் பரிபாகாவஸ்தை யென்றும் வெளியாகின்றன. இதனை, "சேஷவஸ்துவுக்கு, 'சேஷியே ரக்ஷகன்' என்னும் வெளிச்சிறப்பு அறிவுக்கு முதலடி; சேஷவஸ்துவாகில் சேஷிக் கதிசயத்தை விளைப்பது தன் ஸ்வரூபஸித்தி யாகையாலே 'அவன் ரக்ஷ்யன்; நாம் ரக்ஷகர்' என்னுமளவும் செல்லவறிகை ஸ்வரூ பத்தை யுள்ளபடி யுணருகையாவது" என்ற ஈட்டின் வாக்கியத் தாலும் நன்கறியலாம்.

இன்னும், ஆத்மாவுக்கு அடிமையாயிருப்பதே முக்கிய லக்ஷண மாகும். அடிமையாயிருப்பவனுக்கு எஜமானனுக்குமுகமலர்த்தியை யுண்டுபண்ணுவது கடமை. இங்கு, ஸர்வேசுவரனை எவ்வகையால்

மகிழ்விக்கலாமென்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். அளவுபட்ட பெருமையுடையவர்களை மாத்திரம் அவர்களது பெருமையைப் புகழ்ந்துரைத்து மகிழ்விக்கலாம். அளவற்ற புகழுடையவனை அவனது பெருமையுரைத்துப் புகழ்ந்து மகிழ்விக்குமாறில்லை. ஸர்வேசுவரன், ஈறிலவண்புகழுடையவனுதலால் அவன் எல்லா மறிந்தவன்; எல்லாம் வல்லவன்; என்பன முதலிய அவனது பரத்வகுணங்களைப் புகழ்ந்துரைப்பதால் அவனுக்கு முகமலர்ச்சி யுண்டாகமாட்டாது.

பின்னை எதனல் அவனுக்கு முகமலர்ச்சியுண்டாகுமெனின்; தத்வஜ்ஞானத்தின் பரிணமமாகிய போன்பினல் ஈசுவரவிஷயத்திற் பரிவுற்று, 'இவ்வஸ்து நன்ருய் வாழ்ந்திருக்கவேண்டு' மென்று வாழ்த்தி வழிபடுவதைக்கண்டபோது அவன், 'நம் விஷயத்தில் இவன் இங்ஙனம் ஈடுபடுகின்றனனே' என்று மகிழ்ச்சியுடையவ னுவான். இவ்வகையானன்றி மற்றெவ்வகையாலும் அவன்றனக்கு அவ்வளவு முகமலர்ச்சி யுண்டாகமாட்டாது.

இவ்வநுஷ்டானம், நித்யஸூரிகளில் முதலில் எண்ணத் தக்கவராய், எல்லாத் தேசத்திலும் எல்லாக் காலத்திலும் எவ்வகையான நிலைமையிலும் தொடர்ந்தடிமை செய்யத்தக்கவராய், அதனுல் சேஷன் என்னும் நிரூபகநாமத்தைப் பெற்றவராகிய திருவநந் தாழ்வானிடத்திற் காணலாம். நித்யமுக்தர்கள் சாமகானஞ் செய்துகொண்டு எம்பெருமானைக் கிட்டிநின்று அநுபவிப்பதற்கு வரும்போது திருவநந்தாழ்வான், 'அந்தோ! இவர்களால் இந்த வஸ்துவுக்கு என்ன தீங்கு நேருமோ?' என்று பரிவுற்று விஷாக் கினியைக் காலுவர். இதனை, "ஆங்காரவாரமதுகேட்டு அழலுமிழும், பூங்காரரவணை" என்பதாலறியலாம்.

பரமபதத்தில் பயம் குரோத முதலிய துர்க்குணங்கள் எவ்வகையாலும் உண்டாவதற்குப் பிரசக்தியேயில்லை. அப்படியிருக்கவும் திருவநந்தாழ்வானுக்கு இத்தகைய புத்தி விசேஷமுண்டானது. இதனல் இரண்டு விஷயங்கள் வெளியாகின்றன. அவை: வஸ்துவைலக்ஷண்யம் அயர்வற்ற அமரரையும் மயங்கச்செய்யா தொழியுமேல் அது அவ்வளவு பெருமையுடையதில்லையென்பதும்,

அயர்வற்ற அமரரும் இப்படி மயங்காதிருப்பரேல் இவரது பக்தி பாரவசியம் அத்துணைச் சிறந்ததில்லை யென்பதுமாம். இதனால் வஸ்துவை லக்ஷண்யத்தின் சிறப்பும், பக்திபாரவசியத்தின் பெருமையும் வெளியாயின.

சக்கரவர்த்தித்திருமகன், இராவண வதஞ்செய்து வெற்றியுடன் அயோத்திக் கெழுந்தருளினர். பின்னர் அவருக்குப்பட்டாபிஷேகம் நடந்துகொண்டிருக்கும்போது ஒரு வயதுசென்ற முதியோர், வசிஷ்டர் முதலிய ப்ரஹ்மரிஷிகளும், ராஜாதிராஜர்களும் குழுமியிருக்கிற கோஷ்டியைக் கடந்து, இராமபிரானைப் பரிவோடு ஆலிங்கனஞ்செய்தனர். அப்பொழுது இராமபிரான், 'நம்மிடத்தில் இவ்வளவு பரிவுற்றிருக்கின்றனரே' என்று தம் தந்தையாகிய தசரதராக மதித்து, அளவளாவி மகிழ்ந்தனர். * இவ்வரலாறும், தன்னைப் பேணிக்கொண்டாடும் இயல்பினரைக்கண்டு இறைவன் முகமலர்ச்சியுற்றிருப்பானென்பதை வலியுறுத்தும்.

இன்னும், உலக திருஷ்டாந்தத்தால் ஆராய்ந்து பார்ப்போமாகில் பக்திபாரவசியத்தாற் பரிவுறும் நிலைமையே அவன் முகமலர்ச்சிக்கு முக்கிய காரணமாகுமென்பது விளங்கும்:—

ஒரு சக்கரவர்த்தியின் மனைவியானவள், 'நமது சக்கரவர்த்தி ஸார்வபௌமர்; மிக்க சக்தியுடையவர்; இவருக்குக் குற்றேவல் புரிவார் பலருளர்' என்று கருதி ஒரு பணிவிடையுஞ் செய்யாதிருப்பாளாகில் அவளிடத்தில அவனுக் குகப்புண்டாவதில்லை. அந்தச் சக்கரவர்த்தியை வணங்கி வழிபட்டு, 'உம்முடைய தேகம் இளைத்ததே; உலகுக்குயிராக இருப்பவரன்றோ; இப்படி யிருக்கலாமா?' என்று இன்னுரையாடி இன்னடிசிலூட்டிக் கொண்டாடுவாளேல், அவளிடத்தில் சக்கரவர்த்திக்கு மிகவும் உகப்புண்டாகும். "தம்மை யுகப்பாரைத் தாமுகப்பர்" என்பது அடிபட்ட வழக்கன்றே. அன்பின் மிகுதியால இறைவனைப் பேணிக்கொண்டாடும் நிலைமை எப்பொழுதுண்டாகுமோ? அப்பொழுதுதான் அவனுக்கு முகமலர்ச்சியுண்டாகும. அதன்மேல் சேதனனுடைய சேஷத்வமும் வித்திபெற்று விளங்கும்.

* இது, கர்ணபரம்பரையாகக் கேட்கப்படுகிற வரலாறும்.

தத்வதரிசிகளிற் சிறந்தவரும், ப்ரபந்நஜனகூடஸ்தருமாகிய நம்மாழ்வாருக்கும் இறைவனைப் பேணி வழிபடும் நிலையுண்டாயிற் றென்பதை * "அங்குமிங்கும்" என்ற திருவாய்மொழியால் நன்கறியலாம்.

மேலும், லோகதேசிகன் ஸ்ரீவசனபூஷணத்தில் எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தில் ஈடுபட்டுத் தம்மை ரக்ஷகரா மதித்து வாழ்த்தினார்களைத் தொகுத்தருளிச் செய்துள்ளார். அதுவும் இங்கறியத்தக்கதே. அது வருமாறு.—

† "மங்களாசாஸநம் ஸ்வரூபவிருத்தமன்றோ வென்னின்; ஜ்ஞாநதசையில் ரக்ஷ்யரக்ஷகபாவம் தன் கப்பிலே கிடக்கும்; ப்ரேமதசையில் தட்டுமாறிக் கிடக்கும். அவன் ஸ்வரூபத்தை யநுஸந்தித்தால் அவனைக் கடகாகக்கொண்டு தன்னை நோக்கும்; ஸௌகுமார்யத்தை அநுஸந்தித்தால் தன்னைக் கடகாகக்கொண்டு அவனை நோக்கும். இவ்வர்த்தம், சக்ரவர்த்தி, ஸ்ரீ ஜநகராஜன் திரு

---

* இத்திருவாய்மொழிக்கு ஈட்டிற்கண்ட ப்ரவேசம் வருமாறு —"ஏழிற் றிருவாய்மொழியில் பத்தாம் பாட்டிலே "ஓர் கோலநீலநன்னெடுங்குன்றம் வருவதொப்பான்" என்று வடிவழகை யநுஸந்தித்தவாறே, தாம் பட்ட க்லேசத்தை மறந்து, "இவ்வடிவோடே சம்சாரத்திலே தனியே அவதரித்து உலாவாநிற்கும்; சத்ருக்களும், மத்யஸ்தர்களும், ப்ரயோஜநாந்தரபருமாய், இவனுக்குப் பரிவுடையார் ஒருவருமின்றிக்கேயிருக்கிற சம்சாரத்திலே அர்த்திகளுடைய அபேக்ஷிதங்களைப் பூரிக்கைக்காகச் சம்ஸாரஸஜாதீயனாய், (சிலருக்குப் பரதந்த்ரனாயும், சிலார்த்தித்ததுவே வ்யாஜமாக) அவதரித்த அவதாரத்திற்குப் பிற்பட்டார்க்குக்கோயில்களிலும், க்ருஹங்களிலும் சந்நிஹிதனாயும் வர்த்திக்கிற இவனுடைய ஸௌகுமார்யமறிந்து பரியக்கடவார் ஒருவருமில்லை; நானுமுதவப்பெற்றிலேன்" என்று அவன் தனிமைக்கு வெறுத்துப் பீதராக; "நமக்குப் பரிவாரில்லையென்று பயப்படவேண்டா; முமுக்ஷுக்களும் முக்தரும் நித்யஸித்தரும் நமக்குப் பரிகையே யாத்திரையாயிருக்குமவர்களன்றோ, நமக்குத்தான் வேறே சிலர் பரியவேண்டியிருந்ததோ" என்று ஸர்வேசுவரன் தன் ஸர்வசக்தித்வத்தைக்காட்டி, சமாதானம் பண்ண ஸமாஹிதராய் ஹ்ருஷ்டராகிறார்" என்பதாம்.

† இவ்வாக்யங்களின் பொருளை ஸ்ரீ வசனபூஷண வியாக்யானத்திற் காண்க.

மகள், விசுவாமித்திரன், ஸ்ரீ தண்டகாரண்யவாஸிகளான ருஷிகள், திருவடி, மகாராஜர், ஸ்ரீ நந்தகோபர், ஸ்ரீ விதுரர், பிள்ளையுறங்காவில்லிதாஸர் தொடக்கமானவர்கள் பக்கலிலே காணலாம். இளைய பெருமாளை ஸ்ரீ குகப்பெருமாள் அதிசங்கை பண்ண, இருவரையும் அதிசங்கை பண்ணி ஸ்ரீ குகப்பெருமாள் பரிகரம் பெருமாளை நோக்கிற்றிறே. ஒருநாள் முகத்திலே விழித்தவர்களை வடிவழகு படுத்துமபாடாயிற்றிது. இவர்கள் நம்முடைய கோடியிலே என்னும்படியாயிற்று ஆழ்வார்கள் நிலை" என்பதாம்.

இதனால், இறைவனை யுள்ளவாறறிந்த அறிவானது முதிர்ந்து, அத்யந்த ப்ரீதிரூபமாகப்பரிணமித்து அவ்விறைவனுக்கு இதத்தை நாடும் பரிபக்குவமுடையதே தத்வஞ்ஞானமாகுமென்று நிரூபிக்கலாயிற்று.

ப. அ.

ஸ்ரீ:

எம்பெருமானார் அவதார ரஹஸ்யம்.

:o:

[சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

(23-ம் பக்கத் தொடர்ச்சி).

இனி, இவர்கள் செய்யும் சரணாகதி ஸாதனமாகாது. அவன் இவனைத் தனக்காகவே கைக்கொள்ளக்கருதியமுறைக்கு இவனுக்குண்டான அறிவின் பிரயோஜனமாக அதுக்குத் தான் இசைந்திருக்கிற முறையைக் காட்டியதாகும். அதாவது.— இவன் பண்ணும் சரணாகதி, ஈசுவரன் இவனை விஷயீகரிப்பதற்கு இவன் செய்யும் அநுமதிரூபமாகும். ஸாம்ஸாரிக ப்ரவிருத்தியில் ப்ரதம ப்ரவ்ருத்தி, சேதனனுக்குள்ளது. இரண்டாவதுண்டாகும் ப்ரவ்ருத்தி ஈசுவராநுமதிகொண்டு ஸபலமாகக் கூடியதாயிருக்கும். மோக்ஷத்திற்கு வேண்டிய ப்ரவ்ருத்தி முதலில் உண்டாவது ஈசுவர

னுக்கே. சேதனனுடைய அநுமதியுண்டானால் ஸபலமாகத் தலைக் கட்டும். ஆக, மோக்ஷார்த்த ப்ரவ்ருத்தி ஈசுவரனுக்கேயுள்ளதாகை யால் அதனாலுண்டான பலத்தில் அந்வயம் ஈசுவரனுக்கேயுள்ளது. சேதனனுக்கு மோக்ஷஸாதனத்திலும், மோக்ஷத்திலும அந்வய மில்லை. ஆகையால் ஆசார்யர்கட்கு அசுத்திப் பிரஸங்கமில்லையாகை யாலே உபாயமாகத்தட்டில்லை.

ஸித்தோபாயனை ஈசுவரனைப் பற்றுவதைக் காட்டிலும், ஆசார்யனைப்பற்றுவது சிறந்ததாகையாலே அதை விதிக்க வந்த சாஸ்திரம ஸாரதமமாகும். அப்படிப்பட்ட அம்சத்தை நிரூபகனு மிருக்குமவன் பற்றுகையாவது.— அந்த அம்சத்தையே உட் கொண்டு ஆசார்யனையே உபாஸிக்கக்கடவன் என்பதாம். ஆனல் இரண்டுக்கும் வாசியெனனை யெனின்; "ஸித்திர்பவதி வாநேதி ஸம்சயோச்யுத ஸேவிநாம், நஸம்சயஸ்து தத்பக்த பரிசர்யா ரதாத்மநாம்" ஈசுவரனைப்பற்றினர்க்குப பல ஸித்தியில் ஸம்சய முண்டு. ஈசுவரன் ஸ்வதந்தரன். அவன் இவனால் அநுஷ்டிக்கப்படும் கர்மங்களைக் கணக்கிட்டுப் பலத்தை யநுபவிக்கச்செய்யுமவனாகை யாலே, அநாதிகாலம் எல்லை கடந்த அபராதங்களையே செய்து போந்த இவனைக்கண்டதும் இவன் அநுவர்த்தனத்தைக் கணிசி யாதே சிற்றமுற்றுத் தள்ளவுங்கூடும். அவனுடைய பக்தர்களாகிய ஆசார்யர்களைப் பற்றிநின்றார்க்குப் பலந்தப்பாது. ஆசார்யன் ப்ர தந்தரனாகையாலே, அவன் இவனைக்கண்டு நிக்ரஹிக்காமல் அநுக்ர ஹத்தைச்செய்து திருத்துமவனாகையாலே ஆசார்ய ஸம்பந்தமே சீரியதாகும்.

இன்னமும், அறிவிலா அசேதனத்தைப்போல மிகவும் பரதந் தரனாயிருக்கை இவனுக்கு ஸ்வரூபமென்று இவனுடைய ஸ்வரூபத் தைச் சிக்ஷை செய்துகொடுத்தது. அப்படிப்பட்ட ஸ்வரூபம் இவ னுக்கு ஸித்திக்கவேண்டுமானல், அவனுடைய ஸம்பந்தி ஸம்பந்தி களளவும் பரதந்தரமாய் இஷ்டவிநியோகப்படுமபடி இருக்கவேண் டும். அப்படியாகும்போது பாகவதசேஷத்வ பர்யந்தம இசைந்த பிறகுதான் பகவத்சேஷத்வம் ஸித்தித்ததாகும். பகவத் ஸமாசிரய

ணத்தில் இழிந்தவனுக்குப் பாகவத பாரதந்த்ர்யம் ஸித்தித்ததாகச் சொல்லமுடியாது. பாகவத பாரதந்த்ர்யம கைபுகுந்தால ஆசார்யனையே உபாயமாகப்பற்றி நிற்பன். பாகவத பாரதந்த்ர்யம் கை புகுந்தவன்று பகவச்சேஷத்வமே ஸித்தித்ததாக ஆகாது. பாகவதர்களைப்பற்றி நின்றாக்குப் பகவச்சேஷத்வம கைபுகுந்தபிறகு அதடியாகப் பாகவத சேஷத்வம் வந்ததாகும்.

ஆகையால், ஈசுவர சேஷத்வத்தில் பாகவத சேஷத்வம் கைபுகுராமையாலும், ஈசுவர சேஷத்வமே பூர்த்திபடைந்ததாகப் பெருமையாலும், பாகவத சேஷத்வத்தில் பகவச்சேஷத்வம் கைபுகுந்திருக்கையாலும, பகவச்சேஷத்வபூர்த்தி ஸித்திக்கையாலும், "மத்பக்த ஜந பக்தேஷு ப்ரீதிரப்யதிகா மமைவது" என்னுடைய பக்தர்களைப் பக்திசெய்பவர்களிடத்தில் எனக்கு எல்லைகடந்த பிரீதியுண்டாகுமென்று அவன் சொன்னபடி, பாகவத சேஷத்வமுள்ளவர்களிடததில் எம்பெருமானுக்கு அதிசயித பிரீதியுண்டாகுமாகையால் ஆசார்யனைபபற்றுகையே சிறந்ததாகும.

இன்னமும், ஈசுவரனைப் பற்றும்போது ஆசார்யனைப் பற்றி நின்று, அவன் காட்டிக்கொடுத்தபடி ஒழுகி, அவனைப்பற்ற வேண்டும். ஆகையால் பகவத் ஸம்பந்தமானது ஆசார்யஸம்பந்தமில்லாத போது கைபுகாது. பகவத் ஸம்பந்தமில்லாமலே ஆசார்ய ஸம்பந்தம் பெறக்கூடியதாயிருக்கும். ஈசுவரனைப்பற்றி நின்றார்க்கு அவன் ஸ்வரூப ஜ்ஞானத்தை மேன்மேலும் விர்த்திசெய்து வீடு அளிப்பதால் அவனைக் காட்டிக்கொடுத்த ஆசார்யனிடததில் அன்பு வளர்ந்து வரவேண்டும். இலலாவிடில் அவன் இவனுக்கு வீடு அளிக்க வேண்டியிரான். ஆசார்யனைப்பற்றினவன் ஈசுவரனைத் தேவதாந்தரத்தோடு ஒப்பாக எண்ணியிருப்பன். இப்படி இவன் ஈசுவரனை அநாதரிக்கவும் இவனை அவன் ஆதரித்து நிற்பன். ஈசுவரன் ஒரு ஆசார்யனால் திருந்தினவனையே பணிகொள்ளத் தேடுவன். ஆசார்யன் இவனுடன் கூடநின்று, இவனைத் திருத்திப் பணிகொள்வான்.

இன்னமும், ஈசுவரனைப்பற்றி நின்றார்க்குப் பாகவத ப்ரீதி பூர்த்தியடைந்திருக்க நியாயமில்லை. ப்ரீதி குறைவுபட்டிருக்குமானால் பாகவதாபசாரமுண்டாக ப்ரசக்தியுண்டு. ஆசார்யனைப்பற்றி நின்ற வனுக்குப் பாகவத ப்ரீதி அதிகரித்திருக்கும். ஈசுவரனிடத்திற்செய்யும் ப்ரீதியைக்காட்டிலும் எல்லைகடந்த ப்ரீதி பாகவதர்களிடத்திலுண்டானபின்னரன்றோ ஈசுவரனை உபேக்ஷித்து ஆசார்யனை உபாயமாகப்பற்றிநின்றது. ஆகையால் இவனுக்குப் பாகவதப்ரீதி மேலிட்டிருக்கையாலே, பாகவதாபசாரமுண்டாவதற்கு வழியில்லை. பகவதபசார பாகவதாபசாரம் இவனுக்கு நேருமானால் ஆசார்யனிடத்திற் பரிகாரம் பெறலாம். ஈசுவரனிடத்தில் பாகவதாபசாரத்திற்குப் பரிகாரந் தேடிக்கொள்ள முடியாது. ஈசுவரன், பாகவதாபசாரப் பட்டவனைத் தன்னுடைய நிக்ரஹத்துக்கு விஷயமாக்கிக் கீழே தள்ளிவிடுவான். ஆகையால், ஈசுவர விஷயீகாரத்துக்கும், ஆசார்ய விஷயீகாரத்துக்கும் நெடுவாசியுண்டு. ஆதலால் ஆசார்ய ஸமாசிரயணமே சிறந்ததென்பது நன்கு விளங்கும்.

இனி, ஆசார்யர்கள், ஸ்வாநுவிர்த்தி ப்ரஸங்காசார்யர், க்ருபாமாத்ர ப்ரஸங்காசார்யரென இரண்டு வகுப்பினருண்டு. இவர்களுள், ஸ்வாநுவிர்த்தி ப்ரஸங்காசார்யர் — தம்முடைய பெருமையறிந்து, உஜ்ஜீவனத்திற்கேதுவான பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று உறுதிகொண்டு உகந்து பணிவிடை செய்பவரிடத்திற் கிருபைசெய்து உபதேசிப்பவர். க்ருபாமாத்திர ப்ரஸங்காசார்யர்-கிருபை கரைபுரண்டு தம்மை வேண்டாதிருக்கவும் அவன் ஆர்த்தங்கண்டு தாமே வேண்டிச்சென்று, ' இது உனக்கு நன்மையை விளைக்கும் ' என்று உறுதி கூறி, உஜ்ஜீவன ஹேதுவான பொருளை உபதேசிப்பவர். இந்த க்ருபாமாத்திர ப்ரஸங்காசார்யன் கிடைப்பது அரிதிலுமரிது.

தொடரும்.